1993 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 274 திரு. தா. வேடியப்பன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

274—

கம்மலான்பேட்டை மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கல்.

*10925 திரு. தா. வேடியப்பன் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கணியம்பாடி ஒன்றியம், கம்மலான்பேட்டையில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது குடிநீர் வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித் துறை அமைச்சர், மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

கம்மலான்பேட்டையிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் 1992 இறுதிக்குள் குடிநீர் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் ஆழ்துளைக் கிணறு அமைக்க தேர்வு செய்யப்பட்ட இடத்தில் பணி துவங்கச் சென்ற போது அந்த இடத்தில் ஆழ்துளைக் கிணறு அமைக்க அப்பகுதியில் விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்ததால் பணிகள் துவங்கப்படவில்லை. இருப்பினும், மாவட்ட வளர்ச்சி அலுவலர் செய்த சமரச முயற்சி பயன் அளிக்காமல் போனதால், மாவட்ட ஆட்சித் தலைவர் வேறு இடத்தில் ஆழ்துளைக் கிணறு அமைக்க கோரியுள்ளார். மாற்று இடம் தெரிவு செய்யப்பட்டவுடன் பணிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சிறப்பான முறையில் நல்ல பதிலை கொடுத்திருக்கிறார்கள். இருப்பினும் இப்படிப்பட்ட மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டும்போது முதன் முதலாக குடிநீர் ஆதாரங்கள் கண்டுபிடித்துவிட்டு மேல்நிலைத் தொட்டிகள் கட்டுவது நம்முடைய குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய முக்கியமானக் கருத்தாகும். காரணம் என்னவென்றால், 60 இலட்சம் லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியான, இந்தக் கம்மலான்பேட்டையில் கட்டப்பட்டு இருக்கக் கூடிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைப் பார்க்கும்போது

உண்மையிலேயே நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு எந்த நேரத்திலும் மக்கள் நன்றியுடையவர்களாக இருப்பார்கள். அதே நேரத்தில் ஏறத்தாழ 5 லட்சம் ரூபாய் அளவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு மக்களுக்குக் குடிநீர் வழங்கப்படவில்லையென்றால் அது பெரிய வருத்தத்திற்குரிய ஒரு நிகழ்ச்சியாக இருக்கிறது. எனவே, இப்படிப்பட்டத் திட்டங்கள் அந்தப் பகுதியிலே குடிநீர் பெறுவதற்கான பாயின்டைப் பார்த்து போர் போடப்பட்டது, ஆனால் பொது மக்கள் அப்ஜக்ஷன் செய்கிறார்கள் என்று பாதியிலேயே விட்டுவிட்டால் அதனால் மக்கள் பயன்பெற முடியாத நிலை இருக்கிறது. விவசாயத்திற்காக, அந்தக் கிராம பகுதியில் இருக்கின்ற 5,000 மக்கள் பயனடைய முடியாமல் குடிநீரே இல்லாமல் போய்விடக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு அங்கே காவல் துறையை வைத்தாவது நிச்சயமாக அந்த ஆழ்துளைக் கிணறுகளை ஏற்படுத்த வேண்டும். அங்கே ஏறத்தாழ 3 இன்ச் ஈல்டு—100 அடி போட்டவுடனே நல்ல தண்ணீர் வந்தது. எனவே காவல் துறையினரை அங்கே வைத்தாவது ஆழ்துளைக் கிணறு அமைத்திருப்பார்களேயானால் நிச்சயமாக அந்தப் பகுதி மக்களுக்குக் குடிநீர்ப் பிரச்சினை தீர்ந்திருக்கும். எனவே இப்படிப்பட்ட திட்டத்திற்கு காவல் துறை மூலமாகவாவது பாதுகாப்புக் கொடுத்து ஆழ்துளை கிணறுகளை அமைப்பதற்கு வழிவகை செய்யப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடனும், காவல்துறையினருடனும் கலந்து பேசி இது பற்றி முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இதே போன்று கூடிய விரைவில் வரும் ஆண்டிலாவது ஆழ்துளைக் கிணறுகளை அமைத்து அந்தப் பகுதி மக்களுக்குக் குடிநீர் வழங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 275 திரு. ஏ. ரவிக்குமார், டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.